[1974 ஏப்ரல் 8

தான், இந்த நாட்டு இயந்திரம் சரியாக இருக்கும் என்று ஒப்புதல் பெற்ற பிறகுதான் நடவடிக்கை எடுக்கிறோம். மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் இவை செய்யப்படுகின்றன.

* 777 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether power is being generated in Kothayaru Electricity System regularly; and

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) கோதையாறு மின்சாரத் திட்டத்தில் நிரந்தர உற்பத்தி நடைபெறுகிறது. இடையில் சில இடர்பாடுகள் ஏற்பட்ட காரணத்தால், நீடில் சமயத்தில் சரியாக வேலை செய்யாததால், இயந்திரத்தில் பழுது ஏற்பட்டதால் சில வேளைகளில் இயங்கவில்லை. இப்பொழுது முழுமையாக இயங்கும் நிலையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 100 மெகாவாட் இரண்டு பவர் ஹவுஸிலும் உற்பத்தித் திறன் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் எவ்வளவு உற்பத்தித் திறன் இப்போது ஆகிறது என்ற விவரத்தைத் சொல்வார்களா ? அதோடு, பழுதடைந்த மெஷினரிகள் எல்லாம் இப்போது ரிப்பேர் செய்யப்பட்டு விட்டனவா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முழுமையாக இரண்டு பவர் ஹௌஸ்ஸும் ஓடுகிற நிலையில் இருக்கின்றன. கோதயாறைப் பொறுத்து, எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்பதல்ல. 100 மெகாவாட் இருந்தாலும் தண்ணீரை வைத்துக்கொண்டு இவ்வளவு காலத்திற்கு தண்ணீரைப் பயன்படுத்தவேண்டும் என்று தண்ணீர் நிறைய இருந்தால் நிறையச் செய்யலாம்—தண்ணீர் குறைவாக இருப்பதால் கோடை காலத்தில் பகிர்ந்து வைத்துச் செய்கிறோம். ஒவ்வொரு நாளும் எவ்வளவு யூனிட் உற்பத்தியாகிறது என்ற கணக்கு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்லலாம்.

திரு. என். டென்னிஸ் : பழுதடைந்த இயந்திரத்தைச் சீர்படுத்த பல காலமாகிறது. அதனால் குறிக்கோள்படி மின் உற்பத்தியில் தடை ஏற்படுகிறது. ஆதலால் இயந்திரங்கள் பழுதடைந்தவுடனே அவற்றை சீர்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1974 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இருக்கிற சிக்கல் என்னவென்ருல், வெளிநாடு நிபுணர்கள் ஆலோசனைப்படி பொருத்தப்பட்டதாகும். திடீரென்று நீடில் சரியாக வேலை செய்யவில்லை என்ருல் அது இந்த நாட்டில் சமயத்தில் கிடைப்பது சிரமம். வெளி நாட்டிலிருந்துதான் வரவழைக்கவேண்டும். நடைமுறைச் சிக்கல்களால் காலதாமதம் ஆகிறது. அந்தக் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு எந்தெந்த அளவில் முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எல்லாம் எடுத்து வருகிருேம்.

Deers in Point Calimere forests

* 778 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Electricity be pleased to state tre taken by the Government to preserve the deers in the Point Calimere forests near Vedharanyam in Thanjavur district?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வன அலுவலர்கள் சற்று அதிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். சரணலயத்திற்குச் சென்றுவிட்டு வெளியே வருகிறவர்களிடம் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் அந்தப் பகுதியில் வனவிலங்குகள், பறவைகள் இவற்றைச் சுடுவது சட்டம் மூலம் தடுக்கப்படுகிறது.

Hand-pounded rice.

* 779 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister fcr religious endowments be pleased to state the places where mills for the production of hand pounded rice are now run by the Government?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அரசு கைக்குத்தல் அரிசி தயாரிப்பு நிலையம் எதும் நடத்தவில்லை.

திரு. தி. பொன்னுமலை: கைக்குத்தல் அரிசி என்று சொல்லிக் கொண்டே மெஷினில் அறைக்கிற அரிசியைப் பலயிடங்களில் சப்ளை செய்கிருர்கள். சென்ற ஆண்டு கூட இதுபற்றி சேலம் மாவட்டத்தில் நான் ஒரு புகார் கொடுத்தேன். அதுபற்றி இது வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, அதுபற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படி கலப்படம் செய்வார்களாளுல் நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். எந்த இடத்தில் அப்படிச் செய்கிருர்கள் என்பதுபற்றி உறுப்பினர் அவர்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.